# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 3071/ 2010 / எம்சி. 8 நாள் : 27.3.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 31.3.2010 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம்
## மார்ச் 2010

## நிகழ்ச்சி நிரல்

**பொருளடக்கம்**

அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்

ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
|---|---|
| 1 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - 2010-13ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 2 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - 2010-13ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - மின் ஏலம் - மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 3 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம் - சர்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - 2010-13ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - மின் ஏலம் - மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 5 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - 2010-13ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 6 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - 2010-13ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 7 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் ரோடு பன்னீர்செல்வம் பூ மார்க்கெட் மேடைக் கடைகள் மற்றும் வணிக வளாக கடைகள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 8 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - 2010-13ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - மின் ஏலம் - மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 9 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - 2010-13ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 10 | வடக்கு மண்டலம் - நிரந்தர துப்புரவு பணியாளர் - திருமதி.கோணியம்மாள் - வீடு கட்ட முன்பணம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 11 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு பணிகள் நான்கு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 12 | பணியமைப்பு - டெக்ஸ்கோ நிறுவனம் மூலம் ஓட்டுனர்கள் நியமனம் செய்தல் - ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 13 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகரை மேம்படுத்துதல் உத்தேசிக்கப் பட்டுள்ள பணிகள் அரசு நிதி ரூ.13.25 கோடி கோவை உள்ளுர் திட்டக் குழும நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டது - அரசாணை பதிவு செய்தல் மற்றும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| 14 | பணியமைப்பு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 15 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - 2013-13 ஆண்டு- தியாகி குமரன் மார்க்கெட் குத்தகை இனம் - திரு ஆர். சுப்பிரமணியம் ஏலத்தொகையினை திரும்பக் கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 16 | தெற்கு மண்டலம் - லாரிப் பேட்டை மீன் மார்க்கெட் மற்றும் 5 நவீன கட்டண கழிப்பிடங்கள்- வசூல் செய்யும் உரிமம் - முந்தைய ஆண்டு ஒப்பந்ததாரருக்கு நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 17 | உரிம தொகை திரும்ப வழங்குதல் - கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தங்கும் விடுதி உரிமம் ரத்து செய்யப்பட்டது – முடிவுறாத உரிமம் காலத்திற்கான தொகையினை திரும்ப வழங்குவது – தொடர்பாக. |
| 18 | குத்தகை – கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - 2010-2013-ம் ஆண்டுக்கான குத்தகை இனங்களில் “ மின் ஏலம் “ - E-auction மூலம் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 29.03.2010-ம் தேதி கோரியதில் உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைவு செய்தல் மற்றும் ஏலம் போகாத இனங்களுக்கு அலுவலகம் மூலம் வசூல் செய்வது – தொடர்பாக |
| 19 | தெற்கு மண்டலம் - 2010 - 2013 ஆம் ஆண்டு குத்தகை இனமான காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஏலம் கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 20 | வடக்கு மண்டலம் 2010-2013ம் ஆண்டிற்கான உரிமம் இனங்களுக்குரிய “மின் ஏலம்” (e-auction) மற்றும் ஒப்பந்தப்புள்ளி 29.03.2010ம் தேதி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல் மற்றும் நவீன கழிப்பிடம் - சத்தி ரோடு கட்டணம் வசூலிக்கும் உரிமம் - முந்தைய குத்தகைதாரருக்கு நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 21 | நகரமைப்பு பிரிவு - பேருந்து பயணியர் நிழற்குடைகள், பொதுக்கழிப்பிடம் போன்ற பணிகளுக்கு விதிவிலக்கு அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது – அரசு ஆணை பதிவு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |

நன்றியுரை

## அ) திருக்குறள்

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி இடத்தாற் செயின்.

(குறள் 484)

### விளக்கம்

உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமேகூடக் கைக்குள் வந்துவிடும்.

திருவள்ளுவர்.

---

## ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

பொருள் - குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் 2010-13ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 2010-13-ம் ஆண்டிற்கான கீழ்குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை இனங்களுக்கு 1.4.2010 முதல் 31.3.2013 வரையிலான காலத்திற்கு ஏல இனங்களிலிருந்து பெறப்படும் வருவாயை வசூலித்துக் கொள்வதற்கான உரிமை 17.03.2010-ம் தேதிய ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| வ. எண். | ஏல இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத் தொகை 2009-2010 ரூ. | மூன்று ஆண்டு சராசரித் தொகை ரூ. | நடப்பாண்டு ஏலத் தொகை ரூ. | உயர்ந்தபட்ச ஏலதாரர் |
|---|---|---|---|---|---|
| 01. | சிங்காநல்லூர் தினசரி மார்க்கெட் | ரூ.3,02,592/- | ரூ.3,24,201/- | ரூ.4,75,500/- | பி. குமரேசன் |
| 02. | சிங்காநல்லூர் ஆடு அறுவைமனை | ரூ. 85,809/- | ரூ. 73,207/- | ரூ.1,47,000/- | ஏ.சந்திரன் |
| 03. | உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனை | ரூ.1,05,346/- | ரூ. 88,582/- | ரூ.1,46,000/- | பி.பால்ராஜ் |
| 04. | சௌரிபாளையம் ஆடு அறுவைமனை | ரூ.2,07,847/- | ரூ.1,29,823/- | ரூ.1,66,000/- | எஸ். சந்திரன் |
| 05. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.14,99,096/- | ரூ.12,31,201/- | ரூ.13,77,999/- (ஒப்பந்தப்புள்ளி) | வி.மணி வண்ணன் |
| 06. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்யும் உரிமம் | ரூ. 9,000/- | - | ரூ.3,62,400/- (மூன்று வருடத்திற்கு) (ஒப்பந்தப்புள்ளி) வருடத்திற்கு ரூ.1,20,800/- | சி.எஸ். மதிவாணன் |
| 07. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் 3 எண்ணிக்கை எடை காட்டும் இயந்திரங்கள் அமைத்து நடத்திக் கொள்ளும் உரிமம் | ரூ. 10,500/- | - | ரூ. 45,360/- (வருடம் ஒன்றுக்கு) | பி. மணிவண்ணன் |

மேற்காண் இனங்களில் வரிசை எண்கள். 1, 2, 3, 6 மற்றும் 7 ஆகிய இனங்கள் சென்ற ஆண்டு ஏலத் தொகையை விட அதிகமாகவும் மூன்றாண்டு சராசரி தொகையை விட அதிகமாகவும் உள்ளது.

வரிசை எண். 4 மற்றும் 5 ஆகிய இனங்கள் மூன்றாண்டு சராசரி தொகையை விட இந்தாண்டு அதிகமான தொகைகளுக்கு ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

எனவே இனம் எண்கள் 1 முதல் 7 வரையிலான ஏல இனங்களை உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்வது தொடர்பாக வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. அனுமதிக்கலாம் ந.க.எண்.15525/09/கிஎ.11

### மாநகர மன்ற தீர்மானம் எண்.285 நாள் 31.3.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள். குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் – **2010–2013**ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள்–'மின் ஏலம்' E-auction மூலம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது– உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 2010-13-ம் ஆண்டிற்கான கீழ்க்குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு 1.4.2010 முதல் 31.3.2013 வரையிலான காலத்திற்கு– 'மின் ஏலம்' E-auction முறையில் பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி 24.3.2010 மற்றும் 25.3.2010 ஆகிய தேதிகளில் கோரப்பட்டது.

| வ. எண். | ஏல இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத் தொகை 2009-2010 | மூன்று ஆண்டு சராசரித் தொகை | நடப்பாண்டு ஏலத் தொகை | உயர்ந்தபட்ச கேள்விதாரர் |
|---|---|---|---|---|---|
| 1. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் | **4,91,696/–** | **3,56,232/–** | **13,77,777/–** | ஜி.ரங்கராஜ் |
| 2. | புலியகுளம் கட்டணக் கழிப்பிடம் | **1,34,667/–** | **1,85,622/–** | **2,40,000/–** | எம்.ஹரிகிருஷ்ணன் |
| 3. | பாப்பநாயக்கன்பாளையம் கட்டணக் கழிப்பிடம் | **1,32,000/–** | **1,56,033/–** | **2,08,500/–** | எம்.ஹரிகிருஷ்ணன் |

மேற்காண் இனங்களில் வரிசை எண்கள் 1,2 மற்றும் 3 ஆகிய இனங்கள் சென்ற ஆண்டு ஏலத்தொகையைவிட அதிகமாகவும், மூன்றாண்டு சராசரித் தொகையை விட அதிகமாகவும் உள்ளது.

எனவே இனம் எண்கள் 1 முதல் 3 வரையிலான ஏல இனங்களை உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்வது தொடர்பாக வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு . அனுமதிக்கலாம் ந.க.எண்.15525/09/கிஎ.11

**மாநகர மன்ற தீர்மானம் எண்.286 நாள் 31.3.2010**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் உரிமம் – கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம்- புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம்-சர்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு மாதாந்திர உரிமக்கட்டணம் அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்டது-மேலும் 6 மாத காலம் நீட்டிப்பு செய்து வழங்குவது-தொடர்பாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம் சர்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ..20,000/- என்ற அடிப்படையில் 26.07.2006 முதல் 25.07.2009 உடன் முடிவடைந்துவிட்டது. பின்னர் மா.ம.தீ.எண். 68 நாள் 11.09.2009ம் தேதிய தீர்மானத்தில் மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ..20,000/-த்தில் 15% உயர்வு செய்து ரூ.**23,000/–** ஆக **26.07.2009** முதல் **31.03.2010** வரை மட்டும் அனுமதி வழங்கப்பட்டது.

சர்வே ஆப் இந்தியா அலுவலகம், புதிய கட்டிடம் வாடகை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்கு மத்திய அரசின் (Ministry of Science of Technology Govt.of India) அனுமதி பெற நடவடிக்கையில் உள்ளதாக தெரிவித்து மீண்டும் **6** மாத காலத்திற்கு உரிமம் நீட்டிப்பு செய்ய, அடிசனல் சர்வேயர் ஜெனரலிடமிருந்து **17.03.2010**ம் தேதியில் கடிதம் பெறப்பட்டுள்ளது.

எனவே புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபத்தில் தொடர்ந்து **01.04.2010** முதல் **30.09.2010** முடிய மேலும் **6** மாத காலம் சர்வே ஆப் இந்தியா அலுவலகம் நடத்த அனுமதி அளிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்று மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு .</u> அனுமதிக்கலாம். ந.க.எண். 11039/2006/கி.எ.7

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.287 நாள் 31.3.2010</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - 2010 - 2013-ம் ஆண்டிற்கான உரிமம் இனங்களுக்குரிய “மின் ஏலம் “ (e-auction) மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.03.2010 மற்றும் 25.03.2010 ஆகிய தேதிகளில் கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - தொடர்பாக

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட 2010 - 2013ம் ஆண்டிற்கான “மின் ஏலம் “ (e-auction) மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.03.2010 மற்றும் 25.03.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதில் கீழ்கணடவாறு ஏலதாரர்கள் கலந்து கொண்டு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| வ. எண். | ஏல இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத் தொகை 2009-2010 ரூ. | மூன்றாண்டு சராசரி தொகை ரூ. | அரசு வழிக்காட்டி மதிப்பாக நிர்ணயம் செய்த தொகை ரூ. | தற்போதைய உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்த தொகை ரூ. | உயர்ந்த பட்ச ஏலதாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | காந்திபுரம், சீனிவாசபுரம் இரண்டு சக்கர வாகனம் மற்றும் 4 சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 18,93,870/- (துறை மூலம் வசூல்) | 18,18,372/- (துறை மூலம் வசூல்) | 25,00,000/- | 33,52,000/- | K.ராஜீ |
| 2 | ஆம்னி பேருந்து நுழைவு வாயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 8,91,000/- | 8,06,100/- | 10,25,000/- | 13,30,000/- | B.கமலாவதி |
| 3 | நவீன பொதுக் கழிப்பிடம் சீனிவாசபுரம், காந்திபுரம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 3,62,000/- | 3,67,115/- | 4,04,000/- | 4,51,700/- | M.அன்பு ராஜ் |

மேற்காண் இனங்களில் வரிசை எண்கள் 1,2 மற்றும் 3 ஆகிய இனங்களுக்கு சென்ற ஆண்டு ஏலத்தொகை, மூன்றாண்டு சராசரித் தொகை மற்றும் அரசு வழிக்காட்டி மதிப்பு தொகையினைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்படி ஏல இனங்களை உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்ய அவசர அவசியத்தை கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு -</u> அனுமதிக்கலாம். <u>ந.க.எண்.12974/2009/</u> B1/(A7) (N)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.288 நாள்.31.3.2010</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - 2010-2013-ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 04.03.2010, 10.03.2010 மற்றும் 17.03.2010 ஆகிய தேதிகளில் கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - தொடர்பாக

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட 2010-2013-ம் ஆண்டிற்கான குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 04.03.2010, 10.03.2010 மற்றும் 17.03.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதில் கீழ்கண்டவாறு ஏலதாரர்கள் கலந்துகொண்டு ஏலம், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| வ. எண். | ஏல இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத் தொகை 2009-2010 ரூ. | மூன்றாண்டு சராசரி தொகை ரூ. | தற்போதைய உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்த தொகை | உயர்ந்தபட்ச ஏலதாரர் |
|---|---|---|---|---|---|
| 1. | சத்தி ரோடு புல்மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,46,002/- | 1,52,568/- | 1,74,000/- | என்.ஜோதிமணி |
| 2. | சத்தி ரோடு ஆடு மாடு அறுவை மனை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,09,100/- | 2,55,033/- | 2,75,000/- | ஏ.அபுதாகீர் |

மேற்காண் இனங்களில் வரிசை எண்கள் 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சென்ற ஆண்டு ஏலத்தொகை மற்றும் மூன்றாண்டு சராசரித் தொகையினைக் காட்டிலும் கூடுதலாக ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஏல இனங்களை உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்வது தொடர்பாக அவசர அவசியத்தை கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.12974 /2009 B1/(A7) (N)

**மாநகர மன்ற தீர்மானம் எண்.289 நாள் 31.3.2010**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண் 6

பொருள்- கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் 2010-13 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 08.03.2010, 10.03.2010- மற்றும் 17.03.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்றது – ஏலக் கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டது -தொடர்பாக.

----

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், குத்தகை இனங்கள் 2010-13 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 08.03.2010, 10.03.2010- மற்றும் 17.03.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதில் கீழ்கண்டவாறு ஏலதாரர்கள் கலந்துகொண்டு ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ளனர்.

1) காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூல் உரிமையாணை.

| வ. எண் | ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரர்கள் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.எம்.செல்வம் | ரூ.7,37,100 | - | - | - | |
| 2. | திரு.ஏ.எம்.முகமது | ரூ.7,37,100 | - | - | - | |
| 3. | திரு.ஆர்.சுப்பிரமணி | ரூ.7,37,100 | - | - | - | |
| 4. | திரு.எஸ்.சசிக்குமார் | ரூ.7,37,100 | - | - | - | |
| 5. | திரு.எம்.அருண்சங்கர் | ரூ.7,37,100 | ரூ.7,38,000 | ரூ.7,40,400 | ரூ.7,40,400 | 96% |

திரு.ஏ.எம்.முகமது உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ.7,02,000/-க்கு கடந்த 08.03.2010-ம் தேதிய பொது ஏலத்தில் கேட்டிருந்தார். திரு.எம்.அருண்சங்கர் என்பவர் தனது 09.03.10-ம் தேதிய கடிதத்தில் மேற்படி உயர்ந்த பட்ச ஏலத் தொகையில் 5% உயர்த்தி ஏலக் கேள்வித் தொகை நிர்ணயம் செய்தும் 8,65,000/-ற்கு வங்கி வரைவோலை வழங்கி மேற்படி இனத்தை பொதுமறு ஏலத்திற்கு கொண்டு வர விண்ணப்பித்திருந்தார். எனவே 10.03.2010-ம் தேதியன்று மேற்படி இனம் பொதுமறு ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதில் மேற்படி 5 நபர்கள் கலந்து கொண்டனர். அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.7,40,400/-ற்கு திரு.அருண்சங்கர் என்பவர் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.3,76,924/-ஐ விட அதிகமாக உள்ளது. மேலும் மூன்றாண்டு சராசரி தொகையாக நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.3,79,641/-ஐ விட உயர்வாக உள்ளது.

2) தடாகம் ரோடு வாழைக்காய் மொத்த வியாபார மண்டியில் கட்டணம் வசூல் உரிமையாணை.

| வ. எண் | ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரர்கள் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.எம்.உதயகுமார் | ரூ.3,10,000 | ரூ.3,45,000 | - | - | |
| 2. | திரு.கே.ஏ.அபுதாஹீர் | ரூ.3,10,000 | ரூ.3,65,000 | - | - | |
| 3. | திரு.எம்.செல்வம் | ரூ.3,10,000 | - | ரூ.1,00,011 | - | |
| 4. | திரு.ஆர்.சுப்பிரமணி | ரூ.3,10,000 | ரூ.3.80,000 | ரூ.5,40,099 | - | |
| 5. | திரு.கே.ரவி | ரூ.3,10,000 | - | - | - | |
| 6. | திரு.வி.பி.வீரசிங் | ரூ.3,10,000 | ரூ.4,00,000 | ரூ.3,14,100 | - | |
| 7. | திரு.ஏ.இதயத்துல்லா | ரூ.3,10,000 | ரூ.4,01,000 | ரூ.3,12,100 | - | |
| 8. | திரு.எஸ்.சசிக்குமார் | ரூ.3,10,000 | ரூ.3,81,000 | ரூ.5,45,004 | ரூ.5,45,004 | 140% |

திரு.எஸ்.சசிக்குமார் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளியாக 08.03.2010 அன்று ரூ.5,45,004/-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.2,26,852/-ஐ விட அதிகமாக உள்ளது. மேலும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.2,59,950/-ஐ விட உயர்வாக உள்ளது.

3) மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட்டில் கட்டணம் வசூல் மற்றும் மார்க்கெட்டிற்கு வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமையாணை.

| வ. எண் | ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரர்கள் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.கே.ஏ.அபுதாஹீர் | ரூ.1,00,00,000 | 1,02,15,000 | 1,01,27,999 | | |
| 2. | திரு.எஸ்.காளியப்பன் | ரூ.1,00,00,000 | - | - | - | |
| 3. | திரு.எம்.ஹக்கீம் | ரூ.1,00,00,000 | - | - | - | |
| 4. | திரு.ஆர்.சுப்பிரமணி | ரூ.1,00,00,000 | - | | - | |
| 5. | திரு.எம்.அப்பாஸ் | ரூ.1,00,00,000 | 1,05,00,000 | | - | |
| 6. | திரு.வி.எம்.நாச்சிமுத்து | ரூ.1,00,00,000 | - | | - | |
| 7. | திரு.எம்.உதயகுமார் | ரூ.1,00,00,000 | - | | - | |
| 8. | திரு.எம்.மனோகரன் | ரூ.1,00,00,000 | - | | - | |
| 9. | திரு.எம்.சத்தியமூர்த்தி | ரூ.1,00,00,000 | - | 93,36,036 | - | |
| 10. | திரு.ஏ.எஸ்.ஜெயக்குமார் | ரூ.1,00,00,000 | 1,05,75,000 | 1,03,00,000 | - | |
| 11. | திரு.எம். செல்வம் | ரூ.1,00,00,000 | - | - | - | |
| 12. | திரு.ஜி.இருதயராஜா | ரூ.1,00,00,000 | 1,08,01,000 | 95,66,666<br>1,01,00,001 | 1,08,01,000 | 20.71% |
| 13. | திரு.ஏ.அப்துல் ஹக்கீம் | ரூ.1,00,00,000 | 1,08,00,000 | 97,00,000 | - | |

மேற்படி இனத்தை கடந்த 08.03.2010 மற்றும் 10.03.2010 ஆகிய இரு தேதிகளில் பொது ஏலத்தில் கொண்டு வரப்பட்டும் பொது ஏலத்தில் கலந்துகொண்ட ஏலதாரர்களால் ஏலக்கேள்வித் தொகை எதுவும் கோரப்படவில்லை. குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை மட்டுமே பெறப்பட்டது. திரு.ஜி.இருதயராஜா என்பவர் 17.03.2010-ம் தேதிய பொது மறு ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ.1,08,01,000/-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.84,91,715/-ஐ விட அதிகமாக உள்ளது. மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.89,47,405/-ஐ விட அதிகமாக உள்ளது.

**A.** காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூல் உரிமையாணை - இனத்திற்கு 10.03.10-ம் தேதிய மறு ஒப்பந்தப்புள்ளியில் கிடைக்கப் பெற்ற தொகை ரூ.7,40,400-. இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.3,76,924/-ஐ விட அதிகமாக உள்ளது. மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.3,79,641/-ஐ விட உயர்வாக உள்ளது. எனவே இத்தொகையை ஏற்றுக் கொண்டு உயர்ந்தபட்ச கேள்விதாரக்கு இவ்வினத்தை ஒப்படை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**B.** தடாகம் ரோடு வாழைக்காய் மொத்த வியாபார மண்டியில் கட்டணம் வசூல் உரிமையாணை. - இனத்திற்கு 08.03.10-ம் தேதிய பொது ஏலத்தில் திரு.எஸ்.சசிக்குமார் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளியாக ரூ.5,45,004/-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.2,26,852/-ஐ விட அதிகமாக உள்ளது மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.2,59,950/-ஐ விட உயர்வாக உள்ளது. எனவே இத்தொகையை ஏற்றுக் கொண்டு உயர்ந்தபட்ச கேள்விதாரக்கு இவ்வினத்தை ஒப்படை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**C.** மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட்டில் கட்டணம் வசூல் மற்றும் மார்க்கெட்டிற்கு வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமையாணை-

திரு.ஜி.இருதயராஜா என்பவர் 17.03.2010-ம் தேதிய பொது மறு ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ.1,08,01,000/-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.84,91,715/-ஐ விட அதிகமாக உள்ளது. மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.89,47,905/-ஐ விட அதிகமாக உள்ளது. எனவே இத்தொகையை ஏற்றுக் கொண்டு உயர்ந்தபட்ச கேள்விதாரக்கு இவ்வினத்தை ஒப்படை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.12496/ 08/ அ1 (மே)

மாநகர மன்ற தீர்மானம் எண்.290 நாள்.31.3.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

பொருள்: கோவை மாநகராட்சி மேட்டுப்பாளையம் ரோடு பன்னீர்செல்வம் பூ மார்க்கெட் - மேடைக் கடைகள் - மற்றும் உள்ள வணிக வளாக கடைகள் - 15.02.2010-ம் தேதி நடைபெற்ற பொது மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் – முடிவு செய்தல் - பற்றியது.

-----

கோவை மாநகராட்சி மேட்டுப்பாளையம் ரோடு பன்னீர் செல்வம் பூ மார்க்கெட்டில் 5x4=20 சதுரடி பரப்பளவு உள்ள 144 மேடைக் கடைகளை ஒதுக்கீடு செய்தல் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.WP . No. 12892/2002-ல் 22.09.2003-ம் தேதி பிறப்பித்த உத்திரவில் மேற்படி பன்னீர் செல்வம் பூ மார்க்கெட்டில் பூ வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு மேற்படி கடைகளை முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யுமாறு தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி இத்தீர்ப்பை எதிர்த்து தொடரப்பட்ட இடைக்கால விண்ணப்பங்கள் W.P.M.P.No.33466/03 & 33467/03 ஆகியவற்றை 4.10.2004-ல் சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதை தொடர்ந்து 22.09.2003-ம் தேதிய நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மேற்படி கடைகளை ஒதுக்கீடு செய்து இவ்வலுவலக செய்ல்முறைகள் ந.க.எண்.12173/2001/அ1 நாள் 12.10.2004-ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி கடைகளுக்கு மாமன்ற தீர்மான எண்.34 நாள் 30.04.2002-ன்படி தினசரி வாடகையாக ரூ.20- நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வழக்கு எண். W.P.12892/02-ல் 22.09.2003 அன்று வழங்கியுள்ள தீர்ப்பினை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண். 3816/2003-ல் 21.06.2005 அன்று சென்னை உயர்நீதிமன்ற டிவிசன் பெஞ்ச் வழங்கிய தீர்ப்பில் இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.12173/2001/அ1-ன்படி 12.10.2004 அன்று கடைகளை ஒதுக்கீடு செய்து பிறப்பித்த உத்திரவை ரத்து செய்து பொது ஏலம் மூலமாக கடைகளை ஒதுக்கீடு செய்யுமாறு தீர்ப்பளித்துள்ளது.

மேற்காண் தீர்ப்பினை எதிர்த்து மேற்படி மார்க்கெட்டிலுள்ள வியாபாரிகள் 89 கடைகளுக்கு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்து இடைக்கால தடை உத்திரவு பெற்றுள்ளனர். அதன் பின்பு உயர்நீதிமன்ற டிவிசன் பெஞ்ச் மேல்முறையீடு வழக்கு எண்.W.A.No.3816/03-ல் கடந்த 21.06.2005-ம் தேதி வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் ஒதுக்கீடு உத்திரவுகள் ரத்து செய்யப்பட்டு மேடை கடைகள் பொது ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. அதன்படி 25.10.2005 மற்றும் 04.04.2007-ம் தேதி அன்றும் ஏலம் நடைபெற்று 144 மேடை கடைகளில் 111 கடைகளுக்கு ஏலதாரர்களுக்கு ஏற்கனவே கடை ஒதுக்கீடு வழங்கப்பட்டது

போக ஏலத்தில் போகாத (வழக்குகளில் உள்ள கடைகள் நீங்கலாக) மீதமுள்ள 33 மேடை கடைகளுக்கு 5.11.2009 அன்று பொது மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

அதில் உயர்ந்தபட்ச ஏலதாரர்களுக்கு கடை ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மீண்டும் ஏலம் போகாத 10 கடைகளுக்கு பொது மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 15.02.2010 அன்று கோரப்பட்டது. அதில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஏலத் தொகைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

<u>பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடைக் கடைகள்</u>

| வ. எண் | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பு ரூ. | தினசரி வாடகை உச்ச கேள்வி தொகை | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஏலத்-தொகை ரூ. | ஒப்பந்தப்-புள்ளி தொகை ரூ. | |
| 1 | E-56 | திரு.D.சேகர் | 250 | 385 | 720 | 720 |
| 2 | E-56 | திரு.S.மைதீன்பாட்சா | 250 | 360 | 670 | - |
| 3 | F-65 | திரு.A.முஸ்தபா | 100 | 30 | 40 | 40 |
| 4 | F-65 | திரு.P.ஜியாவுதீன் | 100 | 35 | 30 | - |

தடாகம் ரோடு

| வ. எண் | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை மதிப்பு ரூ. | மாத வாடகை உச்ச கேள்வி தொகை | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஏலத்-தொகை ரூ. | ஒப்பந்தப்-புள்ளி தொகை ரூ. | |
| 1 | 14 | திரு.M.உதயகுமார் | 2750 | 2800 | - | 2800 |
| 2 | 14 | திரு.M.மனோகரன் | 2750 | 2785 | - | - |

கிருஷ்ணசாமி ரோடு (வடக்கு)

| வ. எண் | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை மதிப்பு ரூ. | மாத வாடகை உச்ச கேள்வி தொகை | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஏலத்-தொகை ரூ. | ஒப்பந்தப்-புள்ளி தொகை ரூ. | |
| 1 | 5 | திரு.N.சரவணன் | 5613 | 3700 | 2300 | 3700 |
| 2 | 5 | திரு.கங்கபெருமாள் | 5613 | 3400 | - | - |

1) மேற்படி பன்னீர்செல்வம் பூமார்க்கெட் கடைகள் அனைத்தும் 5 x 4 = 20 ச.அடி கொண்டவையாகும்.

கடை எண். E-56-ற்கு நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பைக் காட்டிலும் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டுள்ளதால் இக்கடையை சம்பந்தப்பட்ட திரு.D.சேகர் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யலாம். மற்றும் கடை எண் F-65 கடைக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பை விட குறைவான ஏலக் கேள்வித் தொகை பெற்றிருந்தாலும் ஏற்கனவே 25.10.05, 4.4.07 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மறு ஏலத்தில் கோரிய ஏலக் கேள்வி தொகையை காட்டிலும் (தினசரி வாடகை ரூ.25) (மன்றத் தீர்மானம் நகல் இணைக்கப்பட்டுள்ளது) அதிகப்படியாக உள்ளதாலும், மேற்படி கடையை உயர்ந்த பட்ச ஏலம் கோரிய திரு.A.முஸ்தபா என்பவருக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

2) <u>தடாகம் ரோடு</u> (20 x 11 = 220 sq.ft)

கடை எண்.14-ற்கு நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பைக் காட்டிலும் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை பெறப்பட்டுள்ளதால் இக்கடையை சம்பந்தப்பட்ட திரு.M.உதயகுமார் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

**3)** <u>கிருஷ்ணசாமி ரோடு (வடக்கு)</u> **(17 x 10 = 170 sq.ft)**

கடை எண் 5 கடைக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பை விட குறைவான ஏலக் கேள்வித் தொகை பெற்றிருந்தாலும் ஏற்கனவே 17.04.2002 முதல் தொடர்ந்து பொது மறு ஏலம் நடத்தப்பட்டு வந்தும் ஒருவரும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. மேற்படி கடையின் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஏல கேள்வி தொகையை ஏற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட நபருக்கு கடை ஒதுக்கீடு வழங்க மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>பன்னீர்செல்வம் பூமார்கெட் மேடை கடைகள் (இடைக்கால தடை உத்திரவு பெற்றவை)</u>

**(Munsif Court order Nos: O.S.Nos.199 of 2010, 201 of 2010, 203 of 2010, 205 of 2010 and 207 of 2010)**

**(Munsif Court order Nos: O.S No.238 of 2010 Dt.12.02.2010)**

**Shop Nos: C-21, C-22, C-24, C-26, C-27, D-30 & D-32**

இக்கடைகள் 15.02.2010-ம் தேதிய ஏலத்தில் விடாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

<u>மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கனி எம்.ஜி.ஆர் மார்கெட் உயர்நீதிமன்ற இடைக்கால தடை உத்திரவு பெற்ற கடைகள்</u>

**W.P.No.2701 to 2703/2010 Dt:12.02.2010**
**W.A.S.R No. /2010 Dt.12.02.2010**
**Shop Nos: 59, 64, 66 & 68**

இக்கடைகள் 15.02.2010-ம் தேதிய ஏலத்தில் விடாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

<u>மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துகொள்ளாத கடைகள் விபரம்.</u>

| <u>வணிக வளாகம் உள்ள இடம்</u> | | <u>கடை எண்கள்</u> |
|---|---|---|
| 1. பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடைக் கடைகள் | - | **F-70, F-72, G-85, G-86, G-87, H-93, H-94, H-98** |
| 2. கிருஷ்ணசாமி ரோடு (வடக்கு) | - | **4 & 6** |
| 3. தடாகம் ரோடு | - | **22, 23 & 26** |
| 4. சுப்ரி வீதி புதிய கடை | - | **4A** |

எனவே, மேற்படி உயர்ந்தபட்ச ஏல கேள்வித் தொகை பெற்ற சம்பந்தப்பட்ட ஏலதாரர்களுக்கு கடை ஒதுக்கீடு வழங்கவும், ஏலத்தில் போகாத மேற்படி 14 கடைகளுக்கு மீண்டும் பொது மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு கொண்டுவர வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.49 நாள்.11.03.2010-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு -</u> அனுமதிக்கலாம். ந.க.எண்.5024/2006/ அ1 (மே)

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண்.291 நாள் 31.3.2010</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.49 நாள்.11.03.2010ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## <u>பொருள் எண் 8</u>

பொருள்- கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் 2010-13 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் - மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.03.2010 மற்றும் 25.03.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்றது – ஏலக் கேள்வி

மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டது – மன்ற அனுமதி கோருவது குறித்து.

----

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், குத்தகை இனங்கள் 2010-13 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.03.2010 மற்றும் 25.03.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதில் கீழ்கண்ட ஏலதாரா்கள் உயா்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ளனா்.

ஏலம் நடைபெற்ற நாள்.24.03.2010.

1) திவான் பகதூா் சாலை மாநகராட்சி பள்ளி வளாகத்தில் உள்ள வாகனம் நிறுத்துமிடத்தில் உள்ள இரண்டு சக்கரம், நான்கு சக்கரம் வாகனம் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

| வ. எண் | உயா்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரா்கள் பெயா் | நிா்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயா்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.எம்.அருண் சங்கா் | 16,00,000 | 18,66,000 | - | 18,66,000 | 41% |
| 2. | திரு.கே.நடராஜன் | 16,00,000 | - | 17,52,600 | - | |

திரு.எம்.அருண் சங்கா் உயா்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ.18,66,000/-க்கு கடந்த 24.03.2010-ம் தேதிய பொது மின் ஏலத்தில் கேட்டுள்ளாா். திரு.ஏ.எம்.நாசா் அலி என்பவா் தனது 25.03.2010-ம் தேதிய கடிதத்தில் மேற்படி உயா்ந்த பட்ச ஏலத் தொகையில் 5% உயா்த்தி ஏலக் கேள்வித் தொகை நிா்ணயம் செய்தும் 19,59,300/-ற்கு வங்கி வரைவோலை வழங்கி மேற்படி இனத்தை பொதுமறு ஏலத்திற்கு கொண்டு வர விண்ணப்பித்துள்ளாா். எனவே மேற்படி இனத்திற்கு மீண்டும் 29.03.2010-ம் தேதியன்று பொதுமறு ஏலம் நடத்தப்பட உள்ளது.

ஏலம் நடைபெற்ற நாள்.24.03.2010

2) மேட்டுப்பாளையம் ரோடு பன்னீா்செல்வம் பூ மாா்கெட் அருகில் உள்ள நவீன கழிப்பிடம்.

| வ. எண் | உயா்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரா்கள் பெயா் | நிா்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயா்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.ஏ.எம்.நாசா் அலி | 7,50,000 | 8,80,000 | 12,00,033 | 12,00,033 | 83% |

திரு.ஏ.எம்.நாசா் அலி உயா்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளியாக 25.03.2010 அன்று ரூ.12,00,033/-க்கு கேட்டுள்ளாா். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.6,38,014/-ஐ விட அதிகமாக உள்ளது. மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.6,57,449/-ஐ விட உயா்வாக உள்ளது. எனவே மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

ஏலம் நடைபெற்ற நாள்.25.03.2010

3) பன்னீா்செல்வம் பூ மாா்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (28 நிரந்தர கடைகள் மற்றும் 144 மேடை கடைகள் நீங்கலாக)

| வ. எண் | உயா்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரா்கள் பெயா் | நிா்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயா்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.ஏ.எம்.நாசா் அலி | 23,10,000 | 23,23,232 | 33,00,333 | 33,00,333 | 65% |

திரு.ஏ.எம்.நாசா் அலி உயா்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளியாக 25.03.2010 அன்று ரூ.33,00,333/-க்கு கேட்டுள்ளாா். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.20,05,773/-ஐ விட அதிகமாக உள்ளது. மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.18,85,391/-ஐ விட உயா்வாக உள்ளது. எனவே மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

ஏலம் நடைபெற்ற நாள்.25.03.2010

4) மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மாா்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் மேற்படி மாா்க்கெட்டிற்கு வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை.

| வ. எண் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரர்கள் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.ஜே.ஸ்டீபன் | 37,90,000 | 42,60,000 | 50,40,008 | 50,40,008 | 53% |

திரு.ஜே.ஸ்டீபன் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளியாக 25.03.2010 அன்று ரூ.50,40,008/-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.32,92,793/-ஐ விட அதிகமாக உள்ளது. மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.31,48,951/-ஐ விட உயர்வாக உள்ளது.

<u>ஏலம் நடைபெற்ற நாள்.25.03.2010</u>

5) மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட் நவீன கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

| வ. எண் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரர்கள் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.போஸ் | 3,15,000 | 3,75,000 | 4,27,000 | 4,27,000 | 50% |

திரு.எஸ்.போஸ் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளியாக 25.03.2010 அன்று ரூ.4,27,000/-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.2,81,703/-ஐ விட அதிகமாக உள்ளது. மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.2,84,456/-ஐ விட உயர்வாக உள்ளது. எனவே மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>ஏலம் நடைபெற்ற நாள்.25.03.2010</u>

6) மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்கெட் நவீன கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

| வ. எண் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரர்கள் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.கே.ஏ.அபுதாஹீர். | 3,65,000 | 3,85,000 | 4,50,999 | 4,50,999 | 37% |

திரு.கே.ஏ.அபுதாஹீர் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளியாக 25.03.2010 அன்று ரூ.4,50,999/-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகையினைவிட அதிகமாகவும், மூன்றாண்டு சராசரி தொகையினைவிட உயர்வாகவும் உள்ளது. எனவே மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>ஏலம் நடைபெற்ற நாள்.25.03.2010</u>

7) தடாகம் ரோடு நவீன கழிப்பிடம்

| வ. எண் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரர்கள் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.போஸ் | 4,45,000 | 6,24,444 | 6,77,777 | 6,77,777 | 68% |

திரு.எஸ்.போஸ் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளியாக 25.03.2010 அன்று ரூ.6,77,777/-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.4,03,998/-ஐ விட அதிகமாக உள்ளது.

மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.3,96,145/-ஐ விட உயர்வாக உள்ளது. எனவே மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

ஏலம் நடைபெற்ற நாள்.25.03.2010

8) காந்திபார்க் நவீன கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

| வ. எண் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரர்கள் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.சி.செல்வம் | 2,40,000 | - | 2,92,000 | 2,92,000 | 34% |

திரு.சி.செல்வம் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளியாக 25.03.2010 அன்று ரூ.2,92,000/-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.2,14,534/-ஐ விட அதிகமாக உள்ளது. மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.2,17,800/-ஐ விட உயர்வாக உள்ளது. எனவே மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

வரிசை எண்.4- மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் மேற்படி மார்க்கெட்டிற்கு வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை. இவ்வினத்திற்கு 2009-10 ஏலத் தொகையுடன் 5 சதவீதம் கூடுதலாக நிர்ணயம் செய்து தனக்கு ஒப்படைக்க கோரி முந்தைய ஏலதாரர் திருமதி.ஜெயா என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.A.No.557/2010 இடைக்கால தடை உத்திரவு பெற்றுள்ளார். இவ்வழக்கு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற ரிட் அப்பீல் மனு எண்.W.A.No.557/2010 நாள்.23.03.2010-ல் மேற்படி இனத்தை ஏலம் நடத்தலாம், ஆனால் ஏலம் முடிவு செய்யக்கூடாது என உயர்நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

எனவே 2 முதல் 3 முடிய மற்றும் 5 முதல் 8 வரையிலான மொத்தம் 6 ஏல இனங்கள் உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்வது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தாள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.12496 / 08 / அ1 (மே)

## மாநகர மன்ற தீர்மானம் எண்.292 நாள்.31.3.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் - 2010 - 2013 ஆம் ஆண்டு குத்தகை இனங்களின் ஏல கோரிக்கையை ஏற்பது தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 2010 - 2013 ஆம் ஆண்டு குத்தகை இனங்களான 26 இனங்களில் 13 குத்தகை இனங்களுக்கு 04.03.2010 மற்றும் 10.03.2010, 17.03.2010 ஆகிய மூன்று தேதிகளில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உறுதி செய்யப்பட்ட 12இனங்கள் போக மீதமுள்ள ஓர் இனத்தை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய 13 இனங்களுடன் இணைத்து 14 இனங்களுக்கு 24.03.2010 மற்றும் 25.03.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம்/ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | சென்ற ஆண்டுத் தொகை ரூ. | மூன்றாண்டு சராசரித் தொகை ரூ. | தற்போதைய உயர்ந்தபட்ச தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | தியாகி குமரன் மார்க்கெட் தரை கடை வசூல் | 16,55,500 | 21,00,000 | 34,40,007 | R. சுப்ரமணி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2** | இராமர் கோவில் வீதி மார்க்கெட் | **18,76,766** | **24,00,000** | **28,68,000** | **M.A. கலில் ரஹமான்** |
| **3** | அவிநாசி ரோடு பாஸ் போர்ட் அலுவலகம் இரு சக்கர வாகன வசூல் | **90000** | **1,05,000** | **1,26,000** | **C. நிஜாமுதீன்** |
| **4** | வ.உ.சி.பூங்கா மிருக காட்சி சாலை | **28,10,700** | **33,00,000** | **35,01,000** | எ.சிவகுமார் |
| **5** | ஆடு, அறுவை மனை உக்கடம் | **2,13,818** | **2,50,000** | **2,62,000** | **K. செல்வராஜ்** |
| **6** | பொருள் காப்பகம் உக்கடம்பேருந்து நிலையம் | **1,10,000** | **1,27,000** | **1,28,000** | **V.K. ரகமத்துல்லா** |
| **7** | மத்தியப் பேருந்து நிலையம் தொலைக்காட்சிப் பெட்டி விளம்பரம் | **72008** (மூன்று வருடங்களுக்கு) | **1,00,000** (வருடம் ஒன்றுக்கு அரசு மதிப்பு) | **1,32,002** (வருடம் ஒன்றுக்கு) | **M. அன்புராஜ்** |
| **8** | தியாகி குமரன் மார்க்கெட்டின் உட்புறத்தில் உள்ள இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | **16,55,500** | **17,21,667** | **21,06,999** | என்.ரகோத்தமன் |
| **9** | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தரைதளக் கேரேஜ் பகுதி மற்றும் 5வது தளப்பகுதியில் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் | **16,00,000** | **15,29,997** | **22,66,300** | கே.ராஜு |
| **10** | காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் சைக்கிள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் ( கடை உரிமதாரர்களுக்கு வாகனம் நிறுத்த ஒதுக்கப்பட்ட பகுதி நீங்கலாக ) | **6,02,250** | **7,71,617** | **10,60,000** | எம்.ஹரிகிருஷ்ணன் |
| **11** | இராஜவீதியில் மருந்தக வளாகத்தில் இரு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | **9,00,100** | **8,93,700** | **17,56,700** | டி.வேலுமணி |
| **12** | குரு ஹோட்டல் அருகில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | **9,00,000** | **8,04,667** | **15,00,000** | மயில்சாமி |
| **13** | நவீன கட்டணக் கழிப்பிடம், டவுன்ஹால் அருகில் | **10,95,000** | **11,48,667** | **13,13,133** | சுந்தரமூர்த்தி |
| **14** | நவீன கட்டணக் கழிப்பிடம், தியாகி குமரன் மார்க்கெட் | **5,57,500** | **5,74,351** | **6,56,555** | எம்.உதய குமார் |
| **15** | நவீன கட்டணக் கழிப்பிடம், லிங்கப்ப செட்டி வீதி | **2,45,000** | **2,62,333** | **2,90,150** | பி.அப்துல் கபூர் |
| **16** | நவீன கட்டணக் கழிப்பிடம், போத்தனூர் ரோடு, லாரிப்பேட்டை | **37,000** | **37,167** | **45,500** | பி.அப்துல் கபூர் |
| **17** | நவீன கட்டணக் கழிப்பிடம் வ.உ.சி. பூங்கா வளாகம் | **2,20,000** | **2,23,333** | **2,95,000** | எஸ்.தங்கவேல் |
| **18** | நவீன கட்டணக் கழிப்பிடம், உப்பிலிபாளையம் | **1,37,000** | **1,39,667** | **1,57,000** | எஸ்.போஸ் |
| **19** | நவீன கட்டணக் கழிப்பிடம், செட்டிவீதி | **1,92,000** | **1,78,167** | **2,41,000** | வி.கே.ரகமத்துல்லா |
| **20** | நவீன கட்டணக் கழிப்பிடம், தர்மராஜா கோவில் வீதி | **39,000** | **36,333** | **75,000** | ஜீவரத்தினம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | வ.உ.சி. பூங்கா சிறுவர் ரயில் கட்டணம் | 3,70,008 | 4,25,000 | 5,63,400 | கே. ரமேஷ் |
| 22 | உக்கடம் பேருந்து நிலையம் தொலைக்காட்சிப் பெட்டி விளம்பரம் | 55,000 (மூன்று வருடங்களுக்கு) | 1,00,000 (அரசு மதிப்பு வருடம் ஒன்றுக்கு ) | 1,20,000 (வருடம் ஒன்றுக்கு) | பி.அப்துல் கபூர் |
| 23 | போத்தனூர் ரோடு லாரி பேட்டை | 9,37,000 | 9,85,333 | 9,61,000 | வி.எம்.அப்துல் கக்கூர் |
| 24 | உக்கடம் பேருந்து நிலையம் பேருந்து நுழைவுக் கட்டணம் | 9,02,000 | 9,37,337 | 9,15,000 | எம்.ஏ.சபேர் அலி |
| 25 | காந்திபுரம் மத்தியப் பேருந்து நிலையம் பேருந்து நுழைவுக் கட்டணம் | 22,40,000 | 22,09,000 | 20,72,000 | கே.நடராஜன் |

1. மேற்படி பொது ஏலம், மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண். 1 முதல் 22 வரையிலான இனங்களுக்கு சென்ற ஆண்டு தொகை மற்றும் மூன்றாண்டு சராசரி தொயினை காட்டிலும் கூடுதலாக உயர்ந்த பட்ச ஏலம், ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

2. வரிசை எண். 23 மற்றும் 24 ஆகிய இரண்டு இனங்கள் சென்ற ஆண்டினை காட்டிலும் கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரியினை காட்டிலும் குறைவாகவும் சென்றுள்ளது. இவ்வினங்களுக்கு மூன்று முறை ஏலம் விடப்பட்டுள்ளதால் இவ்வினங்களுக்கான ஏல கோரிக்கையினை ஏற்கலாம்..

3. வரிசை எண். 25ல் உள்ள இனங்ளுக்கு சென்ற ஆண்டு மற்றும் மூன்றாண்டு சராசரியினை காட்டிலும் குறைவாக சென்றுள்ளது. காந்திபுரம் மத்திய பேருந்து நிலைய பேருந்துகள் மேட்டுபாளையம் ரோட்டில் புதிதாக கட்டப்படவுள்ள பேருந்து நிலையத்திற்கு பிரிந்து செல்ல உள்ளதாலும் இவ்வினத்திற்கு மூன்று முறை ஏலம் போடப்பட்டுள்ளதாலும் இவ்வினத்திற்கான ஏல கோரிக்கையினை ஏற்கலாம்.

4. மேற்படி இனங்களுக்கான ஏலக் கோரிக்கைகளை ஏற்று உரிமம் ஒப்படை செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பொருளின் அவரச அவசியத்தை கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின்முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

<u>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்</u> ந.க.எண். **9659/2009/அ1**

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.293 நாள்.31.3.2010</u>

பொருளில் வரிசை எண்.1 தியாகி குமரன் மார்க்கெட் ஏழு இனத்திற்கு மறு ஏலம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண்.1 தவிர அனைத்து இனங்களுக்கும் அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## <u>பொருள் எண் 10</u>

பொருள் - கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண்.31 - நிரந்தர துப்புரவு பணியாளர் திருமதி.கோனியம்மாள், க.பெ. பரமன் அவர்கள் வீடு கட்டிடம் கட்ட கடன் முன்பணம் கோரியது - தொடர்பாக.

பார்வை - திருமதி.கோனியம்மாள், க.பெ. பரமன், நிரந்தர துப்புரவு பணியாளர் வார்டு எண்.31 அவர்களின் 31-10-09 தேதியிட்ட கட்டிட கடன் முன்பணம் கோரும் விண்ணப்பம்.

-----------

பார்வையில் காணும் திருமதி.கோனியம்மாள், க.பெ. பரமன், நிரந்தர துப்புரவு பணியாளர், வார்டு எண். 31 அவர்கள் தனது கணவர் திரு.பரமன் பெயரில் ஆவணம் எண்.4693/ 2003 உள்ளதாகவும், மேற்படி இடத்தில் 786 சதுரடி அளவில் கட்டிடம் கட்ட கொண்டையம்பாளையம் பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டு, ஆவண நகல் மற்றும் கட்டிட அனுமதி நகல் இணைத்து தற்போது மாநகராட்சியில் கடன் முன்பணம் கோரி விண்ணப்பித்துள்ளார்.

மேற்காணும் கட்டிட கடன் தொடர்பாக கீழ்காணும் ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார்.

1. திரு.எம்.பரமன் அவர்கட்கு சொந்தமான இடத்தில் திருமதி.கோனியம்மாள் மாநகராட்சியில் வீட்டு கடன் பெற எவ்வித ஆட்சேபனை இல்லை எனும் தடையின்மை சான்று,
2. நோட்டரி வழக்கறிஞரின் உறுதிமொழிப் பத்திரம்,
3. நோட்டரி வழக்கறிஞரால் அத்தாட்சி செய்யப்பட்ட பத்திர நகல்,
4. மாநகராட்சி வழக்கறிஞர் திரு.ராஜேஷ்கண்ணா அவர்கள் வழங்கிய சட்ட கருத்துரு.

அரசாணைப்படி

மனுதாரர் 1. 6 ஆண்டுகளுக்கு மேல் பணியில் உள்ளார்.
2. 17 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிய உள்ளார்.
இவரது 3. மாத ஊதியம் ரூ. 11,204/-
பிடித்தங்கள் ரூ. 2,027/-

கடன் பெற தகுதி அடிப்படை ஊதியம் ரூ. 8,050
அகவிலைப்படி ரூ. 2,174
--------------
ரூ.10,224 x 75
--------------
அதிக பட்ச கடன் பெற தகுதி பெறுவது ரூ. 7,66,000/-
கடன் கோருவது ரூ. 5,50,000/- (மட்டும்)
வீடு கட்ட கடன் பெறும் பட்சத்தில்
செலுத்த வேண்டிய தொகை ரூ. 3/056/-
சம்பளம் பிடித்தம் செய்யப்படும் சதவீதம் ரூ. 5083 x 100 / 11204 =45%

மனுதாரர் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வீடு கட்டிடம் கட்ட முன்பணம் பெற தகுதியுடையவராக கருதப்படுகிறார்.

1. கணவர் பெயரில் உள்ள அசல் பத்திரம் ஒப்படை செய்யப்பட வேண்டும்.
2. மூலப்பத்திரம், வில்லங்க சான்றிதழ் மேற்படி சொத்துக்கு ஒப்படை செய்ய வேண்டும்.
3. அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகல், மற்றும் பொறியாளர் வழங்கிய மதிப்பீடு.

மேற்படி மனுதாரர் திருமதி.கோனியம்மாள், க.பெ. பரமன், வார்டு எண்.31, நிரந்தர துப்புரவு பணியாளர் அவர்கள் மாநகராட்சியில் 12 ஆண்டுகள் பணியாற்றி, 17 ஆண்டுகள் பணிபுரிய உள்ள நிலையில் இருப்பதாலும், அரசாணைப்படி கடன் பெற தகுதியுடையவராக இருப்பதாலும் இவர் கோரிய வீடு கட்டிடம், கட்ட முன்பணம் கடன் ரூ.5,50,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வழங்கிட மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் எண். - ந.க. எண்.110613/09/ இ1 (வ)

## மாநகர மன்ற தீர்மானம் எண்.294 நாள்.31.3.2010

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண்.11

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு 15-03-2010 மற்றும் 23-03-2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு அபிவிருத்திப் பணிகள் | | | | | | |
| 1 | 1393/2010 / எம்.டி.2 | அவினாசி சாலையில் வ.உ.சி. பூங்கா முதல் கொடிசியா சாலை வரை ஊர்வலம் செல்லும் பாதையில் கிணற்றுநீர் வசதி அமைத்தல் | 19.90 | 18-03-2010 (முதல் அழைப்பு) | தி/ ள் சப்தகிரி போர்வெல்ஸ் | 4.81 % அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 1392/2010 / எம்.டி.2 | அவினாசி சாலையில் வ.உ.சி. பூங்கா முதல் கொடிசியா சாலை வரை ஊர்வலம் செல்லும் பாதையில் குடிநீர் வசதி அமைத்தல் | 19.45 | 18-03-2010 (முதல் அழைப்பு) | தி/ ள் சப்தகிரி போர்வெல்ஸ் | 4.90 % அதிகம் |
| | பொதுப் பணிகள் | | | | | |
| 3 | 9405/2008 / எம்.டி.4 | வார்டு எண்.43 ஒக்கிலியர் காலனி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு கழிப்பிடம் கட்டுதல் | 7.50 | 19-03-2010 (மூன்றாம் அழைப்பு) | பி.இளங்கோ | 4.21 % அதிகம் |
| 4 | 11202/2010 / எம்.டி.2 | வார்டு எண்.4 பாரதி நகரில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 7.00 | 02-03-2010 (இரண்டாம் அழைப்பு) | கே.முருகேசன் | 4.64 % அதிகம் |
| 5 | 7715/2009 / எம்.டி.2 | வார்டு எண்.65 நல்லாம்பாளையம் மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் அலுவலக அறை கட்டுதல் மற்றும் பழுதடைந்த ஓட்டு கூரையை ஆர்.சி.சி. கூரையாக மாற்றுதல் | 12.50 | 08-03-2010 (முதல் அழைப்பு) | தி/ ள் ஆர்.கே.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 3.20 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1393/2010/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண்.295 நாள்.31.3.2010**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 12

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 1.04.2010 முதல் 31.03.2011 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநா்களை தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் - தொடர்பாக.

-------------

கோயம்புத்துார் மாநகராட்சிக்கு ஒப்பந்த தினக்கூலி அடிப்படையில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநா்களை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ. 6796/-ம் அதற்கான சேவைக் கட்டணம் 12% அதற்குரிய சேவை வரி கட்டணம் 12% கல்வி வரி கட்டணம் 3% வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்த காலம் 30.03.2010 உடன் முடிவடைகிறது.

தற்பொழுது ஓட்டுநா்களை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ.6,796/- அதற்கான சேவைக் கட்டணம் 12% - அதற்குரிய சேவை வரிக்கட்டணம் 10.03% (கல்வி வரிக்கட்டணம் 10% உட்பட) வழங்குமாறு கோரியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மேற்படி ஒப்பந்தத்தை 1.04.2010 முதல் 31.03.2011 முடிய மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். அதில் ஓட்டுநர் ஒருவருக்கு 8 மணி நேர பணிக்கு தினக்கூலி அடிப்படையில் மாத ஊதியம் ரூ.8396/- (சேவைக் கட்டணம் 12% மற்றும் அதற்குரிய சேவை வரிக் கட்டணம் 10.03% உட்பட) மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குமாறு அவர்களது கடித எண். 801/CMC/Cbe/2010-11 நாள் 09.03.2010-ல் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இம்மாநகராட்சியில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே தற்போது அவர்கள் கேட்டுக் கொண்டுள்ள கட்டண விகிதத்தில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2010 முதல் 31.03.2011 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த முறையில் பணிபுரிய ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.3497/07/(எம்சி5) எம்சி 7

மாநகர மன்ற தீர்மானம் எண்.296 நாள்.31.3.2010
அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண்.13

பொருள்: உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கோயம்புத்தூர் மாநகராட்சி- மாநகரை மேம்படுத்துதல் - உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் அரசு நிதி ரூ.13.25 கோடி கோவை உள்ளூர் திட்டக் குழும நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டது - அரசாணை பதிவு செய்தல் மற்றும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை : அரசாணை எம்.எஸ்..எண்-65 நாள் 22.03.2010

------------------------

கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறவுள்ளதால் மாநாடு நடைபெறும் பகுதியான அவினாசி சாலையில் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாக ஏற்படவுள்ளதால் அவினாசி சாலையிலிருந்து கீழ்க்கண்ட திட்டச்சாலைகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டு இதற்கான அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி அரசிற்கு பிரேரணை அனுப்பட்டது. அரசு இப்பிரேரணையை ஏற்று இந்த மூன்று திட்டச் சாலைகளை ஏற்படுத்தவும் இதற்கான நிதி ஒதுக்கீடாக ரூ.13.25 கோடி உள்ளூர் திட்டக் குழும நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திட்டச்சாலைகள் அமையவுள்ள பகுதிகள் பின்வருமாறு.

I அவினாசி சாலையிருந்து திருச்சி சாலையை இணைக்கும் வகையிலான ரங்கவிலாஸ் மில் திட்டச் சாலையை அமைத்தல்.

II அவினாசி சாலை நவ இந்தியா சந்திப்பு மற்றும் 100’ அடி அகல சின்ன சாமி சாலையை இணைக்கும் விதமாக நவஇந்தியா சாலையை திட்ட சாலையாக அமைத்தல் மற்றும் அகலப்படுத்துதல்.

III மசக்காளிபாளையம் சாலை (பகுதி) 60’ அடி அகல திட்டச் சாலையாக உருவாக்குதல் மற்றும் அகலப்படுத்துதல்

மேற்கண்ட இந்த மூன்று திட்டச் சாலைகளை உருவாக்க அந்தந்த பகுதியிலுள்ள இடங்களை அரசுக்கு கையகப்படுத்த நில மதிப்பிட்டுத் தொகையாக ரூ.4.01 கோடியை சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு வழங்கவும், ரூ.9.24 கோடியில் சாலைகள் ஏற்படுத்தவும், பாலங்கள், சிறு பாலங்கள் மற்றும் மழை நீர் வடிகால்கள் முதலானவற்றை கட்டவும், தெருவிளக்குகள் அமைக்கவும் ஆக மொத்தம் ரூ.13.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் கோடியில் | அலுவலக குறிப்பு |
|---|---|---|---|
| 1 | அவினாசி சாலையிருந்து திருச்சி சாலையை இணைக்கும் வகையிலான ரங்கவிலாஸ் மில் திட்டச் சாலையில் தார்தளம் அமைத்தல். | 2.750 | நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் தலைமை பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி பெற பரிந்துரை செய்ததை மன்றம் ஏற்கலாம். ஒப்பந்தபுள்ளி கோரலாம். |

| | | | |
|---|---|---|---|
| 2 | அவினாசி சாலை நவ இந்தியா சந்திப்பு மற்றும் 100’ அடி அகல சின்னசாமி சாலையை இணைக்கும் விதமாக நவஇந்தியா சாலையை தார்தளம் அமைத்தல் மற்றும் அகலப்படுத்துதல். | 1.750 | நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் தலைமை பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி பெற பரிந்துரை செய்ததை மன்றம் ஏற்கலாம். ஒப்பந்தபுள்ளி கோரலாம். |
| 3 | ரங்கவிலாஸ் மில் அருகே 40 அடி அகல திட்ட சாலை அமைத்தல் மற்றும் ஜி.வி ரெசிடென்சி அருகே சௌரிபாளையம் சாலையை இணைக்க வாய்க்கால் பகுதியில் பாலம் அமைத்தல் | 0.750 | அரசின் நிதியை எதிர்நோக்கி மாநகராட்சி பொது நிதியின் மூலம் நடைபெற்று வரும் இப்பணிக்கான நிதியை தற்பொழுது பெறப்பட்டுள்ள அரசு நிதியிலிருந்து ஈடு செய்யலாம் (பார்வை: மாமன்ற தீர்மான எண் 248 நாள்2-3-2010) |
| 4 | ரங்கவிலாஸ் மில் திட்டச் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.745 | ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதி வழங்கலாம் |
| 5 | ரங்கவிலாஸ் மில் திட்ட சாலையில் கம்பங்களுடன் கூடிய 250 வாட்ஸ் தெருவிளக்குகள் அமைத்தல் | 0.250 | ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதி வழங்கலாம் |
| 6 | ரங்கவிலாஸ் மில் திட்ட சாலையில் அவினாசி சாலை முதல் அணணாநகர் சாலைவரை தடுப்பு சுவர் கட்டுதல் | 0.750 | ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதி வழங்கலாம் |
| 7 | ரங்கவிலாஸ் மில் திட்ட சாலையில் மசக்காளிபாளையம் சாலை முதல் ஜி.வி ரெசிடென்சி சாலை வரை தடுப்பு சுவர் கட்டுதல் | 0.385 | ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதி வழங்கலாம் |
| 8 | சின்னசாமி சாலையிருந்து எஸ்.என்.ஆர். கல்லூரி மற்றும் ஆவராம்பாளையம் சாலை வழியாக அவினாசி சாலை வரை 60 அடி திட்ட சாலை குறுக்கே சங்கனூர் பள்ளத்தில் புதியதாக பாலம் கட்டுதல் | 0.750 | அரசின் நிதியை எதிர்நோக்கி மாநகராட்சி பொது நிதியின் மூலம் நடைபெற்று வரும் இப்பணிக்கான நிதியை தற்பொழுது பெறப்பட்டுள்ள அரசு நிதியிலிருந்து ஈடு செய்யலாம் (பார்வை: மாமன்ற தீர்மான எண் 280 நாள்19-3-2010 |
| 9 | நவ இந்தியா திட்ட சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.250 | ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதி வழங்கலாம் |
| 10 | நவ இந்தியா திட்ட சாலையில் கம்பங்களுடன் கூடிய 250 வாட்ஸ் தெருவிளக்குகள் அமைத்தல் | 0.250 | ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதி வழங்கலாம் |
| 11 | நவ இந்தியா திட்ட சாலையில் தடுப்பு சுவர் கட்டுதல் | 0.500 | ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதி வழங்கலாம் |
| 12 | மசக்காளிபாளையம் திட்ட சாலை அமைத்தல் | 0.11 | ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதி வழங்கலாம் |
| 13 | மேற்ச்சொன்ன மூன்று திட்ட சாலைகளை உருவாக்கஅந்த பகுதியில் உள்ள இடங்களை மாநகராட்சி கையகப்படுத்த நில மதிப்பீட்டுத் தொகை | 4.01 | |
| | மொத்தம் | ரூ13.25 கோடி | |

எனவே மேற்க்கண்ட பணிகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு :

1. மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம். அரசாணை எண். 65 நாள் 22-03-2010-ஐ மாமன்றம் பதிவு செய்யலாம்.
2. வரிசை எண் 1,2ல் உள்ள பணிகளுக்கு நகராட்சி நிா்வாக இயக்குநரகத்தின் தொழிநுட்ப அனுமதி பெற பரிந்துரை செய்ததை மாமன்றம் ஏற்கலாம் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
3. வரிசை எண் 3,8 ல் குறிப்பிட்டுள்ள மாநகராட்சி பொது நிதியில் இருந்து நடைபெற்று வரும் இப்பணிக்கான நிதியை தற்பொழுது அரசு நிதியில் இருந்து ஈடுசெய்யலாம்.
4. வரிசை எண் 4,5,6,7,9,10,11 மற்றும்12 முதல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
5. வரிசை எண் 13 ல் உள்ள பணிகளுக்கு சம்மந்தப்பட்ட நில உரிமையாளா்களுக்கு மாவட்ட ஆட்சியாளரால் நிா்ணயிக்கப்படும் நில மதிப்பீட்டுத் தொகை வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 12359 / 2009 / எம்.டி.3

## மாநகர மன்ற தீா்மானம் எண்.297 நாள்.31.3.2010

1. அலுவலகக்குறிப்பு 1,2,3,4 மற்றும் 5 அனுமதிக்கப்பட்டது.

2. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள அவினாசி சாலையிலிருந்து திருச்சி சாலையை இணைக்கும் வகையிலான ரங்கவிலாஸ் மில் திட்டசாலைக்கு அண்ணா நகா் திட்டச் சாலை என பெயா் சூட்ட தீா்மானிக்கப்பட்டது.

3. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள இதர இரண்டு சாலைகளுக்கும் செம்மொழி திட்டசாலை என பெயா் சூட்ட தீா்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.14

பொருள் : உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010-கோயம்புத்தூா் மாநகராட்சி - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக கோயம்புத்தூா் மாநகராட்சி கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்தல் - அயற் பணியில் நிரப்புதல் - தொடா்பாக.

-----

அரசாணை (பத்தாண்டு) எண்.134, நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கு (மா.ந.4) துறை நாள் 29.03.2010-ன்படி கோயம்புத்தூா் மாநகராட்சியில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணிகளை நிறைவேற்ற கீழ்கண்ட பணியிடங்களை முற்றிலும் தற்காலிகமாக 15.07.2010 வரையிலான காலகட்டத்திற்கு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இப்பணியாளா்களின் செலவினத்தை கோயம்புத்தூா் மாநகராட்சியே மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியிடத்தின் பெயா் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவி செயற் பொறியாளா் | 2 |
| 2. | இளநிலை பொறியாளா், உதவி பொறியாளா் | 10 |
| 3. | வரைவாளா், தொழிற்நுட்ப உதவியாளா் | 10 |

மேற்படி பணியிடங்களை நகராட்சி நிா்வாக இயக்குநா் அவா்களின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் பொறியியற் பணியாளா்களைக் கொண்டு அயற்பணியில் (**Deputation**) நிரப்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியிடங்களை நிரப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். **3142/2010/எம்சிசி1**

## மாநகர மன்ற தீா்மானம் எண்.298 நாள்.31.3.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.15

கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 2010-2013 ஆம் **ஆண்டு** குத்தகை இனமான தியாகி குமரன் மாா்க்கெட் குத்தகை இனத்திற்கு 4.03.2010ஆம் தேதியில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திரு.ஆா். சுப்பிரமணியம் என்பவா் அளித்த உயா்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.34,40,007/- ஆனது மூன்று வருடங்களுக்கென குறிப்பிட்டதாகவும் தனக்கு மேற்படி தொகையினை மூன்று வருடங்களுக்கென ஏற்று உரிமம் வழங்குமாறும், தவறும் பட்சத்தில் தாம் செலுத்தி உள்ள ஏலத் தொகையினை திரும்ப வழங்குமாறு கோரி 25.03.2010 ஆம் தேதியில் விண்ணப்பம் அளித்துள்ளாா்.

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்களை 2010 – 2013 ஆம் ஆண்டிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படை செய்வதற்கு அரசாணை நிலை எண். 78 நாள். 25.05.2009 ந.நி.கு.வ.துறை (மா.ந.2) ல் தெரிவித்துள்ள திருத்திய நடைமுறைகளின் படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 04.03.2010, 10.03.2010, 17.03.2010 ஆகிய தேதிகளில் நடைபெறும் என 16.02.2010ம் தேதி நாளிதழில் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டது.

இதில் 04.03.2010 ஆம் தேதியில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திரு. ஆர். சுப்பிரமணியம் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ..34,40,007/- ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகை மாநகராட்சி ஆணையர் செய்த தொகையினை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் அன்னாரது ஏல கோரிக்கையினை உறுதி செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து 10.03.2010ம் தேதியில் நடைபெற்ற பொது ஏல பட்டியலிலிருந்து மேற்படி இனம் நீக்கம் செய்யப்பட்டு உயர்ந்தபட்ச ஏல கோரிக்கை கோராத இனங்களுக்கு மட்டும் மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் விபரத்தை 8.03.2010ஆம் தேதியில் அறிவிப்பு பலகையில் மேற்படி அறிவிப்பு ஒட்டப்பட்டது. இக்காலகட்டத்தில் மேற்படி குத்தகைதாரரிடமிருந்து தாம் கோரியுள்ள தொகை வருடம் ஒன்றுக்கு ரூ.11,46,669/- என்றும் இத்தொகை சென்றாண்டு தொகை ரூ.16,55,500/-ஐ காட்டிலும் குறைவாக உள்ளது என்று தெரிவித்திருந்தும் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

மேற்படி 10.03.2010 மற்றும் 17.3.2010ம் தேதிகளில் நடைபெற்ற மறு ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரப்படாத இனங்களுக்கு 24.03.2010 மற்றும் 25.03.2010 ஆகிய தேதிகளில் மின் ஏலம் நடைபெறும் விபரத்தை நாளிதழில் 21.03.2010ம் தேதியில் விளம்பரம் செய்யப்பட்டது. இக்காலக்கட்டத்திலும் குத்தகைதாரர் தமது கோரிக்கையினை அளிக்கவில்லை. எனவே 4.03.2010ம் தேதியில் நடைபெற்ற ஏலத்தில் உறுதி செய்யப்பட்டது என தெரிந்திருந்தும் 24.03.2010ம் தேதி வரை எவ்வித தகவலும் தெரிவிக்காமல் 25.03.2010ம் தேதியில் தமது ஆட்சேபணையை அளித்துள்ளார்.

எனவே ஏலதாரரின் இச்செயலால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட உள்ள காரணத்தால் மாநகராட்சி பொது ஏல நிபந்தனைகள் பத்தி எண்.11 (அ) மற்றும் (உ) ல் தெரிவித்துள்ளபடி ஏலதாரரின் வைப்பு தொகையை பறிமுதல் செய்து ஏலதாரர் பொறுப்பிலேயே இவ்வினத்திற்கு மறு ஏலம் கோரியும், அதனால் ஏற்படும் இழப்பினை முழுவதையும் ஏலதாரரிடமிருந்து வசூல் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> ஒப்புதல் அளிக்கலாம்  ந.க.எண். 9659 / 2009 / அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.299 நாள்.31.3.2010</u>

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஒப்படை செய்யும் காலம் வரையிலும் துறை மூலம் வசூல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

---

<u>பொருள் எண்.16</u>

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்களில் கீழ்க் குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களை அதன் எதிரே குறிக்கப்பட்டுள்ள காரணங்களுக்காக 2010 - 2013 ஆம் ஆண்டிற்கு ஏலம் விடுவதலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டது (மாமன்ற தீர்மான எண். 135 நாள். 30.11.2009).

| வ.எண் | இனம் | நீக்கம் செய்யப்படுவதற்கான காரணம் |
|---|---|---|
| 1. | லாரிபேட்டை மொத்த மீன் வியாபார மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | இவ்வினத்தை மீன் வளர்ச்சித் துறைக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதால் நீக்கம் செய்யப்படுகிறது. |
| 2. | நவீன கட்டண கழிப்பிடம் உக்கடம் பேருந்து நிலையம். | பேருந்து நிலையங்களில் உள்ள நவீன கழிப்பிடங்கள் மட்டுமே தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. பேருந்து நிலையம் மாநகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டிலிருந்து மாநகராட்சி பேருந்து நிலையத்துடன் சேர்த்து நவீன கட்டண கழிப்பிடங்களை பராமரித்துக் கொள்ளவும் பேருந்து நிலையங்களில் போதுமான காவலர்கள் நியமித்து பாதுகாப்பு செய்வதுடன் ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படா வண்ணம் பாதுகாக்கவும், மேலும் பேருந்து நிலையம் மற்றும் கழிப்பறைகளுக்கு வர்ணம் செய்து தூய்மையாக வைத்துக் கொள்ளவும் தனியார் பங்களிப்புடன் கழிப்பிடங்களை புதுப்பித்து கட்டிக் கொள்ளவும் அதற்கு தேவையான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ள காரணத்தால் ஏலம் விடுவதலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| 3. | நவீன கட்டண கழிப்பிடம் காந்திபுரம் நகர பேருந்து நிலையம் ஆர்.வி.ஹோட்டல் எதிரில். | |
| 4. | நவீன கட்டண கழிப்பிடம் காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம். | |
| 5 | நவீன கட்டண கழிப்பிடம் காந்திபுரம் நகர பேருந்து நிலையம் (B3 காவல் நிலையம் அருகில்) | |
| 6 | நவீன கட்டண கழிப்பிடம் (புதியது) காந்திபுரம் நகர பேருந்து நிலையம் | |

மேற்குறிப்பிட்டுள்ள இனங்களில் செயல்படுத்த வேண்டிய திட்டப் பணிகளின் ஆயுத்தப் பணிகள் முடிவடையாத காரணத்தாலும், மேற்படி இனஙகளின் வசூல் பணிகளை துறை மூலம் மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும் இதனால் ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கவும் இவ்வினங்களை கடந்த ஆண்டு குத்தகைக்கு எடுத்துள்ள ஏலதாரர்களுக்கு கடந்த ஆண்டு ஏலத்தொகையில் 5% கூடுதல் செய்து மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

இப்பொருளின் அவசர அவசியத்தை கருதி வரி விதிப்பு மற்றும் நிதிக் குழு தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

<u>அலுவலக குறிப்பு:</u> ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 9659/ 2009 / அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.300 நாள்.31.3.2010</u>

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## <u>பொருள் எண்.17</u>

பொருள்: உரிம தொகை திரும்ப வழங்குதல் - கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தங்கும் விடுதி உரிமம் ரத்து செய்யப்பட்டது – முடிவுறாத உரிமம் காலத்திற்கான தொகையினை திரும்ப வழங்குவது – தொடர்பாக.

***********

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனமான காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தங்கும் விடுதியில் 2006-07 முதல் 2008-09 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் திரு.ராகவலிங்கம் என்பவருக்கு ஆண்டு உரிமத்தொகை ரூ.18,25,000/- என்ற அடிப்படையில் பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேற்படி குத்தகை இனத்தில் சட்டத்திற்கு புறம்பான செயல்கள் நடைபெறுவதை கண்டறிந்து 28.12.08ம் தேதியில் தங்கும் விடுதியினை மாநகராட்சி மூலம் பூட்டி சீல் வைக்கப்பட்டு மாமன்றத்தின் அனுமதி பெற்று உரிமம் ரத்து செய்யப்பட்டது.

இதனை எதிர்த்து குத்தகைதாரர் திரு. டி. ராகவலிங்கம், என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.22286 / 09 / மூலம் தொடரப்பட்ட வழக்கில், மேற்படி குத்தகை ரசீது செய்யப்பட்ட காலத்திலிருந்து உரிமம் முடிவுறாத காலத்திற்கான தொகையினை குத்தகைதாரருக்கு திரும்ப வழங்கவும், தங்கும் விடுதியில் உரிமதாரரால் அமைக்கப்பட்டுள்ள உபகரணங்களை திரும்ப ஒப்படை செய்யப்பட வேண்டும் எனவும் சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சென்னை உயர்நீதி மன்ற மாநகராட்சி வழக்கறிஞர் தனது கருத்துருவில் ஏலதாரருக்கு திரும்ப வழங்கப்பட வேண்டிய தொகையினை உரிமத்தொகை மற்றும் தங்கும் விடுதியில் உள்ள ஏலதாரருக்கு சொந்தமான உபகரணங்களையும் நீதிமன்ற உத்திரவின்படி திரும்ப் வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்படி சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் உரிமம் முடிவுறாத காலத்திற்கான (29.12.08 முதல் 31.03.09 வரை) தொகை ரூ.4,71,456/- ல் காப்புத் தொகை ரூ.75,000/- யை பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை ரூ.3,96,456/- யை திரு.டி.ராகவலிங்கம் என்பவருக்கு திரும்ப வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பொருளின் அவசர அவசியத்தை கருதி வரி விதிப்பு மற்றும் நிதிக் குழு தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

<u>அலுவலக குறிப்பு:</u> ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.11488 / 2009 / அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.301 நாள்.31.3.2010</u>

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண்.18**

**பொருள்–** குத்தகை – கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - 2010-2013-ம் ஆண்டுக்கான குத்தகை இனங்களில் " மின் ஏலம் " - E-auction மூலம் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 29.03.2010-ம் தேதி கோரியதில் உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைவு செய்தல் மற்றும் ஏலம் போகாத இனங்களுக்கு அலுவலகம் மூலம் வசூல் செய்வது – தொடர்பாக

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 2010-2013-ம் ஆண்டிற்கான கீழ்குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு 01.04.2010 முதல் 31.03.2013 வரையிலான காலத்திற்கு " மின் ஏலம் " E-auction முறையில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 29.03.2010-ம் தேதியில் கோரப்பட்டது.

| வ. எ ண். | ஏல இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத் தொகை 2009-2010 ரூ | மூன்றாண்டு சராசரி தொகை ரூ | நடப்பாண்டு தொகை (ஓராண்டுக்கு) ரூ | உயர்ந்தபட்ச ஏலதாரர் |
|---|---|---|---|---|---|
| 1. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் கட்டணக் கழிப்பிடம் | 3,02,320/– | 2,74,273/– | 7,75,777/– (ஒப்பந்தப் புள்ளி) | வி.கே. ரஹமத்துல்லா |
| 2. | இராமநாதபுரம் கட்டணக் கழிப்பிடம் | 1,95,546/– | 2,06,882/– | 2,94,100/– (ஒப்பந்தப் புள்ளி) | எம். முத்துகிருஷ்ணன் |
| 3. | ரேஸ்கோர்ஸ் ரோடு கட்டணக் கழிப்பிடம் | 35,083/– | 42,694/– | 17,100/– (ஒப்பந்தப் புள்ளி) | வி.கே. ரஹமத்துல்லா |

மேற்காண் இனங்களில் 1 மற்றும் 2 ஆகிய இனங்களில் சென்ற ஆண்டு ஏலத் தொகையை விட அதிகமாகவும், மூன்றாண்டு சராசரி தொகையை விட கூடுதலாகவும் உள்ளது.

வரிசை எண். 3-ல் சென்ற ஆண்டு ஏலத்தொகை மற்றும் மூன்றாண்டு சராசரி தொகையை விட குறைவாக கோரியுள்ளார்.

எனவே, வரிசை எண். 1 மற்றும் 2 ஆகிய ஏல இனங்களின் உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைவு செய்தும், வரிசை எண். 3ற்கான ஏல இனத்தினை அலுவலகம் மூலம் வசூல் செய்வது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 15525/2009/அ.11

**மாநகர மன்ற தீர்மானம் எண்.302 நாள்.31.3.2010**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண்.19**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 2010 - 2013 ஆம் ஆண்டு குத்தகை இனமான காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 04.03.2010, 10.03.2010, 17.03.2010, 24.03.2010 மற்றும் 25.03.2010 ஆகிய தேதிகளில் ஐந்து முறை ஏலம் விடப்பட்டு, கீழ் குறிப்பிட்டுள்ளவாறு மட்டும் உயர்ந்தபட்ச ஏலத்தொகை பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | சென்ற ஆண்டுத் தொகை | மூன்றாண்டு சராசரித் தொகை | தற்போதைய உயர்ந்தபட்ச தொகை | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 4,61,000 | 4,62,500 | 4,38,100 | எம்..எ. சபேர் அலி |

மேற்படி .இனத்திற்கு ஐந்து முறை ஏலம் விடப்பட்டும் மேற்குறிப்பிட்டுள்ள ஏலத் தொகையினை காட்டிலும் கூடுதலாக ஏலம் கோர ஒருவரும் முன் வராத காரணத்தால் திரு.எம்..எ. சபேர் அலி அவர்களின் உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

இப்பொருளின் அவசர அவசியத்தை கருதி வரி விதிப்பு மற்றும் நிதிக் குழு தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.9659/ 2009 / அ1

மாநகர மன்ற தீர்மானம் எண்.303 நாள்.31.3.2010

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண்.20

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் 2010-2013ம் ஆண்டிற்கான உரிமம் இனங்களுக்குரிய “மின் ஏலம்” (e-auction) மற்றும் ஒப்பந்தப்புள்ளி 29.03.2010ம் தேதி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல் மற்றும் நவீன கழிப்பிடம் - சத்தி ரோடு கட்டணம் வசூலிக்கும் உரிமம் - முந்தைய குத்தகைதாரருக்கு நீட்டிப்பு தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட 2010 – 2013ம் ஆண்டிற்கான “மின் ஏலம்” (e-auction) மற்றும் ஒப்பந்தப்புள்ளி 29.03.2010 அன்று நடைபெற்றதில் கீழ்க் கண்டவாறு ஏலதாரர்கள் கலந்து கொண்டு ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏல இனங்கள் | சென்ற ஆண்டுத் தொகை 2009-2010 ரூ | மூன்றாண்டு சராசரித் தொகை ரூ | அரசு வழிகாட்டி மதிப்புக்காக நிர்ணயம் செய்த தொகை ரூ | தற்போதைய உயர்ந்த பட்ச ஏலம் ஒப்பந்த தொகை ரூ | உயர்ந்த பட்ச ஏலதாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | நவீன பொதுக் கழிப்பிடம் கணபதி கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 3,25,500/- | 3,56,921/- | 3,93,000/- | ஒருவர் மட்டும் கலந்து கொண்டார் | இல்லை |
| 2 | சிவானந்தா காலனி பேருந்து நிலையம் அருகில் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | புதிய இனம் | புதிய இனம் | 2,50,000/- | 1,10,000/- (ஒப்பந்தப் புள்ளி) | C.R. விநாயகம் |

1) மேற்காண் இனங்களில் வரிசை எண்.1க்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியை யாரும் கோரவில்லை. பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக, துறை மூலமாக மேற்படி பணி மேற்கொள்ள இயலாத நிலை எள்ளது. எனவே, சென்ற ஆண்டு ஏலத் தொகையில் 5% கூடுதலாக ஏலத் தொகையை வசூலித்துக் கொண்டு சென்ற ஆண்டு குத்தகைதாரர் திரு. C.R.விநாயகம், அவாகளுக்கு 01.04.2010 முதல் மூன்று மாதங்களுக்கு மட்டும் நீட்டிப்பு வழங்கவும்,

2) இனம் வரிசை எண்.2 சிவானந்தா காலனி, பேருந்து நிலையம் அருகில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் ஆண்களுக்கான இரண்டு கழிப்பிட அறைகள் மற்றும் நான்கு சிறுநீர் கழிப்பிடங்கள், பெண்களுக்கான இரண்டு கழிப்பிட அறைகள் மட்டுமே உள்ளன. இந்த இனத்திற்கு ரூ.1,10,000/- உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி திரு. C.R.விநாயகம், அவர்கள் கேட்டுள்ளார். இந்த கட்டணத் தொகை அரசு வழிக்காட்டி மதிப்பு தொகையினைக் காட்டிலும் குறைவாக உள்ளது. எனினும், இந்த இனம் முதல்முறை புதியதாக ஏலம் விடுவதால் மேற்படி உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ள திரு. C.R.விநாயகம், அவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்கவும்,

3) கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம், சத்தி ரோடு, நவீன கழிப்பிடம் தனியார் பங்களிப்புடன் பராமரிக்க மாமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது இதற்கான ஆயத்த பணிகள் இன்னும் முடிவடையாததால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதை தவிர்க்க சென்ற வருட ஏலத் தொகையில் 5% கூடுதலாக வசூலித்துக் கொண்டு சென்ற வருட குத்தகைதாரர் திரு. P.V.சுப்ரமணி, அவர்களுக்கு 01.04.2010 முதல் மூன்று மாதங்களுக்கு மட்டும் உரிமக் காலம் நீட்டித்து வழங்கவும் அவசர அவசியத்தை முன்னிட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்று மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண்.12974/ 2009 / பி1/(அ7)(வ)

---

**மாநகர மன்ற தீர்மானம் எண்.304 நாள்.31.3.2010**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள். 21**

கோயம்புத்தூர் மாநகர மன்றத் தீர்மானம் எண்.94, நாள் 30.09.2009-ன் பேரில் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியதில் அரசாணை நிலை எண்.58, நாள்.29.03.2010-ல் தமிழ்நாடு விளம்பர வரிகள் விதிகளில், விதி எண்.6-ல் உப விதி 1 மற்றும் 2-ல் கோயம்புத்தூர் மாநகராட்சியால் செயல்படுத்த உள்ள பேருந்து பயணியர் நிழற்குடைகள், பொதுக்கழிப்பிடம் போன்ற பணிகளுக்கு விதிவிலக்கு அளித்து ஆணை பிறப்பித்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. விருப்பு கேட்பு அறிக்கை மூலம் தேர்வு செய்யப்படும் தனியார் நிறுவனங்களுக்கு முதற்கட்டமாக மூன்று ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கவும், மேலும் மூன்று ஆண்டுகளுக்கு அனுமதி புதுப்பிக்கும் வகையிலும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 5541/2009/எம்.எச்5

**மாநகர மன்ற தீர்மானம் எண்.305 நாள்.31.3.2010**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம் ) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி